Australian Government

# Multicultural Framework Review
# பல்கலாசார கட்டமைப்பு மீளாய்வு

## பல்கலாசார கட்டமைப்பு மீளாய்வை அறிமுகம்செய்தல்

பல்கலாசார கட்டமைப்பு மீளாய்வு அறிக்கையை வெளியிடுவது குறித்து ஆஸ்திரேலிய அரசாங்கம் மகிழ்ச்சியடைகிறது.

இந்த மீளாய்வு ஆஸ்திரேலியாவின் பல்கலசார சமூகத்தின் நிலையை மீளாய்வு செய்கிறது மேலும், சட்டங்கள், கொள்கைகளுக்கான மாற்றங்களை சிபாரிசு செய்கிறது; அத்துடன் நிறுவன ரீதியாக அதன் வல்லமையில் கட்டப்படும் அமைப்புகள் சமகால மாற்றங்களுக்கு பதிலளிப்பதற்கு அதை இயலக்கூடியதாக்குகிறது.

மூன்று பிரசித்திபெற்ற ஆஸ்திரேலியர்களான - டாக்டர் பூலென்ற் ஹாஸ் டெலால் ஏஓ (Dr Bulent Hass Dellal AO), செல்வி நயாடொல் நூயொன் ஓஏஎம்(Ms Nyadol Nyuon OAM) மற்றும் செல்வி கிறீஸ் ரீன் காஸ்ற்லீ (Ms Christine Castley) ஆகியோர் இந்த மீளாய்வை மேற்கொண்டார்கள். திரு ஒஸ்மண்ட் சியூ(Mr Osmond Chiu); செல்வி சுவாதி தேவ்(Ms Swati Dave);செல்வி ரணா இப்ரஹிமி(Ms Rana Ebrahimi); திரு பாச்சார் ஹூலி(Mr Bachar Houli); திரு ஜோன் கமாரா(Mr John Kamara); செல்வி பிரேமிலா லெவாகி (Ms Premila Levaci )மற்றும் மொஹமட் அல் ஹா:பாஜி(.Mr Mohammad Al-Khafaji) ஆகியோரை உள்ளடக்கிய தகவலறிந்த மற்றும் தொடர்புடைய ஆலோசனைக் குழுவினால் இந்த மீளாய்வுக்குழுவானது ஆதரவளிக்கப்பட்டது.

உரைவடிவில் 33 மொழிகளிலும் மற்றும் கேட்பொலி(audio)வடிவில் 35 மொழிகளிலும் சமர்ப்பணங்களை மேற்கொள்வதற்கு மீளாய்வு அத்துடன் அழைப்புப் பற்றி அரசாங்கம் தகவல்களை வெளியிட்டது. இந்தக் குழு 796 சமர்ப்பணங்களைப் பெற்றுக்கொண்டது.

அதன் யோசனைகளை அறிவிப்பதற்கு ஆங்கிலம் தவிர்ந்த 126 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. எமது பல்கலாசார சமூகம் குறித்த அவர்களின் அனுபவங்கள் மற்றும் கருத்துகளை படங்கள் வாயிலாகத் தெரிவிப்பதற்கு 4 முதல் 24 வயதுடைய இளம் பிள்ளைகளையும் இது அழைத்தது. அவர்களுடைய 103 சித்திர வேலைப்பாடுகளை www.homeaffairs.gov.au/onlineartexhibition இல் பார்வையிடலாம்.

## எமது பல்கலாசார வெற்றிக் கதையைக் பாதுகாத்துப் பேணுதல்

குறைந்தபட்சம் 65,000 ஆண்டுகளாக, இந்தக் கண்டத்திலே பல கலாசாரங்களை பூர்வீக மற்றும் ரொறெஸ் நீரிணைத் தீவகத்து மக்கள் காத்துப் பேணிவந்துள்ளனர். குடியேற்றக்காலத்திலிருந்து அவற்றை அறவே ஒழிப்பதற்கான அனைத்து - சிலவேளைகளில் வன்முறை- முயற்சிகளையும் அவர்கள் தடுத்துள்ளார்கள். முதல் மக்களின் வரலாறு மற்றும் கலாசாரம் குறித்து மிகுந்த புரிந்துணர்வு மற்றும் கொண்டாட்டம் போன்றவற்றுடன் வெற்றிகரமான பல்கலாசாரம் ஆரம்பமாகிறது.

1788-இல் ஆஸ்திரேலிய கண்டத்திற்கான புலம்பெயர்வு ஆரம்பித்த வேளையில், 1945-இலிருந்து, 950,000-க்கும் அதிகமான அகதிகள் மற்றும் மனிதாபிமானம் தேவைப்பட்ட மக்கள் உட்பட 7.5 மில்லியன் மக்களை ஆஸ்திரேலியா வரவேற்றுள்ளது. இத்தகைய அளவிடற்கரிய, மேலும், அமைதியான மாற்றங்கள், தேசிய உறுதிப்பாடு மற்றும், பெருமை போன்றவற்றிற்கு ஊற்றாக உள்ளன.

## இந்த மீளாய்விலிருந்து முக்கிய கண்டுபிடிப்புகள்

1430 தனிப்பட்டவர்கள், 750 நிறுவனங்கள் போன்றவற்றிற்கும் மேலாக ஆலோசனைசெய்வதற்காக இந்தக் குழுவானது ஆஸ்திரேலியா முழுவதும் பயணம்செய்துள்ளது. பல்வேறு நுண்ணறிவுகளுக்கு மத்தியில் இந்தக்குழு கண்டறிந்தவை வருமாறு:

- பாகுபாட்டைத் தடுக்க, சமவாய்ப்புகளை ஊகுவிக்க மற்றும் உறுதியான அரச சேவைகளுக்கு வாய்ப்பை வழங்க, அரசாங்கம் சட்டங்களையும், கொள்கைகளையும் நிலைநாட்டும்போது, ஆஸ்திரேலியாவைத் தமது சொந்த நாடாக அழைக்கும் அனைத்து மக்களும், எமது பல்கலாசார சமூகத்தை காத்துப் பேணுவதற்கு தமக்குள்ள பொறுப்பைப் பகிர்ந்துகொள்ளவேண்டும்.
- பிராந்திய சமூகங்கள் மேலும் மேலும் கலாச்சார ரீதியாக பல்வேறுபட்டவையாகும் அத்துடன், பல்கலாசார கதையின் முக்கியமான ஒரு பகுதியாகும்.

- ஆஸ்திரேலியர்களின்  வாழ்க்கையைப் பல்வேறு காரணிகள் வடிவமைக்கின்றன. கொள்கையை உருவாக்கும்போது பாகுபாடு குறித்து ஊடறுக்கும் வடிவங்களை அரசாங்கம் கட்டாயம் ஆலோசிக்கவேண்டும்.
- ஆஸ்திரேலியாவின் பல்கலாசார எதிர்காலத்தை வரையறைசெய்யும் இளைஞர்கள், கொள்கை உருவாக்கும் பரிசீலனைகளின் முக்கிய இடத்தில் இருக்கவேண்டும்.

மீளாய்வின் மூன்று அடிப்படைக் கொள்கைகளிலிருந்து இந்தக் குழுவினது 29 பரிந்துரைகள் வெளிவருகின்றன:

- **தொடர்பு** - அரசாங்கம் மற்றும் சமுதாயங்களின் அனைத்து மட்டங்களுக்கிடையேயும் தலைமைத்துவம், திட்டமிடல், மற்றும் பொறுப்புக்கூறல் ஊடாக பல்கலாசார ஆஸ்திரேலியாவிற்கான அடித்தளங்களை அமைத்தல்
- **அடையாளம் மற்றும் உடைமை** - ஆங்கில மொழி நிகழ்ச்சிநிரல்கள், குடியுரிமைக்கொள்கை, மற்றும் கலை, கலாசாரம், விளையாட்டுகள், மற்றும் ஊடகம் போன்றவற்றில் பங்குபற்றுதல் ஊடாக வரவேற்கும் ஆஸ்திரேலியாவை உருவாக்கல்.
- **உள்ளடக்கல்** - பொது சேவைகளுள் கலாசார இயலுமையைக் கட்டிவளர்த்தல், மானிய திட்டங்களை தமக்கு ஏற்றதாக்குதல், டிஜிரல் உள்ளடக்கம் மற்றும் வலுவான மொழி சேவைகள் துறையை உறுதிசெய்தல் அத்துடன் இளைஞர்கள் மற்றும் பிராந்திய பகுதிகளின் தனித்துவமான தேவைகளைப் பூர்த்திசெய்தல்.

எப்போதும் நடாத்தப்படும் ஆஸ்திரேலிய மக்களுடைய பல்கலாசாரத்தின் மிக முக்கியமான மற்றும் சிந்தனைமிக்க மீளாய்வுகளுக்கிடையில் இது இருக்கிறது. அனைத்து ஆஸ்திரேலிய மக்களின் திறன்களை ஆஸ்திரேலியாவினுடைய பல்கலாசார அமைப்புகள் ஒன்றுசேர்ப்பதை உறுதிப்படுத்துவதற்கு எமது அர்ப்பணிப்பைக் கட்டிவளர்க்கும்போது, அரசாங்கம் அதற்கு உறுதிஅளிப்பதுடன், கட்டமைப்பின் கொள்கைகளால் வழி நடாத்தப்படும்.